திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுநேரம் பயணம் செய்யும் பேருந்துகளில், பயணச் சிரமம் பிரயாணிகளுக்கு ஏற்படாமல் இருக்க தூங்கும் வசதி கழிப்பிட வசதி, தொலைக் காட்சி வசதி போன்றவசதிகளைச் செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய அறையிலே இருப்பது போன்ற எல்லா வசதிகளும் பஸ்களில் வேண்டும் என்கிறார். அந்த வகையிலேதான் நாங்களும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதிலே முதற்கட்டமாக 2 பேருந்துகளைத் தயார் செய்திருக்கிறோம். அவைகள் எப்படி வெற்றிகரமாக இருக்கிறது என்பதைப் பார்த்து, தொடர்ந்து விரிவாகச் செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாட்டில் ஒடிக்கொண்டிருக்கும் ஆம்னி பஸ்கள்.

*வினா எண். 623 திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசு அனுமதி வழங்கியுள்ள ஆம்னி பஸ்கள் எத்தனை ஒடிக்கொண்டிருக்கின்றன.?

(ஆ) அவைகளில் மிக உயர்வான கட்டணங்கள் வசூலிக்கப் படுவது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில் கட்டணங்களை நிர்ணயம் செய்ய அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா?

(ஈ) ஆம்னி பஸ்களின் போட்டியினால் அரசு போக்குவரத்துக் கழகங்கள் நட்டமடைவது உண்மையா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி; (அ) 96

(ஆ) அவ்வாறான புகார் ஏதும் அரசுக்கு வரவில்லை.

(இ) எழாது

(ஈ) ஆம்

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தமிழகத்திலே இந்த பேருந்துகள் 96 ஒடுகின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பேருந்துகள் 96க்கு மேலும் பல பேருந்துகள் ஓடுகின்றன என்ற புகார்கள், பொதுமக்கள் மத்தியிலே இருந்து வந்திருக்கின்றனவா. அந்தப் பேருந்துகளிலேயெல்லாம் வசூலிக்கப்படுகிற கட்டணங்கள், அரசுப் பேருந்துகளில் வசூலிப்பதை விட மிக அதிகமான கட்டணங்களாக வசூலிக்கப் படுவது பற்றியும் ஏதாவது புகார்கள் அரசுக்கு வந்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

1982 மார்ச் 23]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே உரிமம் வழங்கியிருக்கிற பேருந்துகள் 97 பக்கத்து மாநிலங்களிலிருந்து பேருந்துகள் நம்முடைய மாநிலத்திற்குள்ளே வருவதற்கும் உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது. அப்படிபட்ட பேருந்துகளில் சில முறையாக உரிமம் பெறாமல் இருந்தும் இங்கே வந்து விடுகிறார்கள். அதிலே புகார்கள் வந்திருக்கின்றன. அப்படிப்பட்டவைகளை நம்முடைய பேருந்து கண்காணிப்பாளர்கள் கண்டுபிடித்து தடுத்து நிறுத்துவதோடு, அவர்கள் மீது நடவடிக்கையும் எடுத்து வருகிறார்கள். அதிலேயுள்ள கட்டண விகிதங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பேருந்துகளில் கட்டணவிகிதங்கள் ஒரு நாளைக்கு இவ்வளவு என்ற விகிதத்திலேதான் வாங்க வேண்டும் அதாவது 50 பேர்கள் அதிலே ஒரு நாளைக்கு வருகிறார்கள் என்றால், அந்த 50 பேர்கள் ஒரு நாளைக்கு அதைப் பயன்படுத்துவார்களேயானால் எவ்வளவு தொகை என்றுதான் பார்த்துக் கொடுக்க வேண்டும்.

(முற்பகல் 10-30)

ஒரு இருக்கைக்கு இவ்வளவு தூரத்திற்கு என்ற கணக்கு அதில் இல்லை. அப்படி வாங்குவதாகப் புகார் வரவில்லை. புகார் வந்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தப் பேருந்துகளுடைய போட்டியினால் அரசாங்க வழித்தடங்களிலே ஓடுகின்ற அரசாங்க பஸ்களுக்குக்கூட வசதி குறைவாக வருகின்றது என்ற பிரச்சினை எழுந்து அது பல இடங்களிலே மக்கள் மத்தியிலே பேசப்படுகின்றது. இந்த நிலையில் இந்தத் தொல்லைகள் இல்லாமல் இருக்க இந்த ஆம்னி பஸ்கள் ஓட்டுவதை அரசே ஏற்று நடத்துவதற்கும் இந்த ஆம்னி பஸ்கள் ஓட்டப்படுவதை கட்டுப்படுத்துவதற்கு கடினமாக உள்ள நிலைமையில் அவை ஓடாமல் செய்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே 97 பேருந்துகளின் காரணமாக அரசினுடைய போக்குவரத்துக் கழகத்தினைப் பொறுத்த வரையில் கொஞ்சம் பிரச்சினை இருக்கின்றது. ஆனால் அது பெரிய பிரச்சினை என்று சொல்ல முடியாது. 7,000 பேருந்துகளுக்கு மேலே இருக்கின்றது.

இந்த ஆம்னி பஸ்களைப் பொறுத்தவரையிலே ஒரு இடத்திலே இருந்து இன்னொரு இடத்திற்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்லவேண்டும் என்கின்ற வகையிலே மற்ற பேருந்துகளிலே வசூலிப்பதைப்போன்று வசூலிக்கக்கூடாது. இது ஒப்பந்தப் பேருந்து என்ற வகையிலே ஒரு நாளைக்கு 50, 60 பேர் சேர்ந்து எடுத்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட அளவுக்குத்தான் அதைப்

பயன்படுத்தவேண்டும். ஆனால் அவர்கள் தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட இடங்களிலேயே பயன்படுத்துவதாகக் தகவல் வருகின்றது என்றால் அவர்களைப் பிடிக்கிறார்கள். ஆனால் கடுமையான நடவடிக்கை எடுக்க முடியாத வகையிலே சில சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. அதனால் தப்பித்துக்கொள்கிறார்கள். இதுபற்றி முழுமையாக நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி எடுத்தபோது கூட நீதிமன்றத்திலே அது தடை செய்து வைக்கப் பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்த ஆம்னி பஸ்களுக்காக ஆள்பிடிப்பதற்காக ஆட்கள் இரயில் நிலையங்களுக்கு வருகிறார்கள். அவர்கள் வந்து பொதுமக்களை அழைத்துக்கொண்டு செல்கின்றனர். அதற்காக அவர்களுக்குக் கமிஷனும் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலைமையைத் தடுக்க அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கும் பயணிகளைப் பிடித்து வருகின்றவர்களுக்குக் கமிஷன் தரும் முறையை அரசு அமல் படுத்துமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துத் துறையிலே அப்படிச் செய்வதற்குச் சாத்தியம் இல்லை. ஆனால் பேருந்துகளை நல்ல முறையிலே வைத்துக்கொண்டு அதன்மூலம் பயணிகள் தாங்களாகவே வரக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, சென்ற ஆண்டு ஆம்னி பஸ் சம்பந்தமாக ஒரு பெரிய ஊழல் நடந்ததாகவும் அதிலே பல காவல்துறை அதிகாரிகளும், போக்குவரத்து துறை அதிகாரிகளும் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர்களுக்கு ஏதாவது தண்டனை கொடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் என்னுடைய ஞாபகத்தில் இருப்பதைச் சொல்கிறேன். அந்த அதிகாரிகளின் மீது சட்டப்படி துறையினுடைய விசாரணைப்படி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு தண்டனை கொடுப்பதற்காக துறை அதனை விசாரித்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS